2010 ஏப்ரல் 20]

சமுதாயத்தைச் சார்ந்த மாணவப் பெருமக்கள் பயிலக்கூடிய காரணத்தால், அரசு நிச்சயமாக உரிய விதித் தளர்வு செய்யும். காரணம் என்னவென்று சொன்னால், இத்தகைய சூழல்களில் அதிகமாக ஆதி திராவிட மாணவர்கள் படிக்கக்கூடிய பள்ளி, அதைப்போல மலைப்பாங்கான பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அதேபோல, மகளிருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்கின்ற அடிப்படையில் அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த மணல்மேடு அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும் உரிய வகையில் விதித் தளர்வு செய்து இந்த ஆண்டு அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு உத்தரவாதம் தந்திருப்பதற்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியை அந்தப் பகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

68—

உயிரியல் பூங்கா

***62332—திரு. தா. மலரவன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் உயிரியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2010 ஏப்ரல் 20

கோயம்புத்தூரில் புதிதாக உயிரியல் பூங்கா அமைப்பதற்கான தேவை ஏற்படவில்லை.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.*

திரு. தா. மலரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் உயிரியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருந்தேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரே வரியில், அங்கே அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று சொல்லிவிட்டார்கள். கோயம்புத்தூரைப் பொறுத்தவரையில், இங்கே இருப்பதைப்போல மெரினா பீச் அங்கேயில்லை. திருச்சியிலே இருப்பதைப்போல, காவிரி நதியும் அங்கேயில்லை. மக்கள் பொழுதுபோக்குவதற்கு எந்த இடமும் அங்கேயில்லை. மாநகராட்சிக்குச் சொந்தமான 'சிதம்பரம் பூங்கா' என்று ஒரு பூங்கா இருக்கிறது. அதுவும் சிறியது. அதையும் காவலர்கள் ஆக்கிரமித்துக்கொள்கிறார்கள். ஆகவே, குழந்தைகளை அழைத்துக்கொண்டு, குடும்பத்தோடு சுற்றிப் பார்ப்பதற்கு அங்கே எந்த இடமும் இல்லாத காரணத்தினால்தான், இந்தக் கேள்வியை நான் எழுப்பியிருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து, மக்கள் நலனிலே அக்கறைச் செலுத்தி, வண்டலூரிலே இருப்பதைப்போல, ஓர் உயிரியல் பூங்காவை கோவையிலே அமைப்பதற்கு முன்வர வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அங்கே கவுண்டம்பாளையத்திலே 35 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தைப் பயன்படுத்தி, நீங்கள் அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கேள்வியிலேயே கோவை மாநகரிலே மாநகராட்சியின் சார்பாக வ.உ.சி. பூங்கா இயங்கி வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, உயிரியல் பூங்கா அமைப்பதற்கு தேசிய வன உயிரின ஆணையம் அதற்கான அனுமதியைத் தருவதில்லை. ஆனால்,*

2010 ஏப்ரல் 20]

கோயம்புத்தூரைப் பொறுத்த அளவில், அங்கே ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. பொதுவாக, மக்கள் சூழல் அமைப்பிலேதான் அதைக் கண்டுகளிக்க விரும்புகிறார்கள். அங்கே, அருகிலேயே இந்திரா காந்தி தேசிய வனச் சரணாலயம் இருக்கிறது. அதைப்போல, வால்பாறை பகுதியிலே புலிகள் காப்பகம், நீலகிரி மாவட்டத்திலே பல இடங்கள் இருக்கின்ற காரணத்தால், அந்தச் சூழல் அமைப்பிலேதான் மக்கள் பார்க்க ஆர்வம் காட்டுகிறார்கள். எனவே, அதுவே இப்பொழுது போதும் என்று நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன்.*

திரு. தா. மலரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வால்பாறையில் இருக்கின்ற இந்திரா காந்தி வன உயிரியல் பூங்காவைப் பற்றிச் சொல்கிறார்கள். அந்தப் பூங்காவிற்கு கோவையிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டும். ஆனால், நான் கோவை மக்களுக்காக, கோவை மாநகரத்தை ஒட்டியிருக்கக்கூடிய மக்களுக்குக் கேட்கிறேன். அங்கே நிறைய இடம் இருக்கிறது. மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் கோவையிலே 600 ஏக்கர் இருக்கிறது. அதேபோல, கோவை நகரத்திலே 35 ஏக்கர் இடம் இருக்கிறது. மக்களுக்குச் சேவை செய்கிறோம் என்று சொல்லக்கூடிய நீங்கள், இதைக் கருத்தில்கொண்டு, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று, கோவை மாநகர மக்களுக்கு இந்த வன உயிரியல் பூங்காவை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன உயிரியல் பூங்காக்கள் அமைப்பதற்கான அனுமதி கேட்ட பல நேரங்களில், மறுத்திருக்கிறார்கள். இப்பொழுது தமிழகத்தில் 8 உயிரியல் பூங்காக்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. எனவே, புதிதாக உயிரியல் பூங்கா அமைப்பதற்கான வாய்ப்பில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*